(இ) கோரிக்கை எண் 52 - மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 52—மாற்றுத் திறனாளிகள் நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.192,09,93,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பிற்பகல் 2-20

5. அறிவிப்பு

பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 9-9-2011, வெள்ளிக்கிழமை அன்று, ஓணம் பண்டிகையை முன்னிட்டு, சென்னை உள்ளிட்ட சில மாவட்டங்களுக்கு உள்ளூர் விடுமுறை விடப்பட்டுள்ளதால், 9-9-2011 வெள்ளிக்கிழமையன்று எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 6 - கால்நடை பராமரிப்பு, மானியக் கோரிக்கை எண் 7 - மீன் வளம் மற்றும் மானியக் கோரிக்கை எண் 8 - பால் வளம் ஆகியன 10-9-2011 (சனிக்கிழமை) அன்று பேரவையின் ஒப்புதலோடு எடுத்துக்கொள்ளப்பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 07-09-2011 (புதன்கிழமை) அன்று காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-21 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

–ஏதுமில்லை–

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

97. மானியக் கோரிக்கை எண் 45 - சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011-2012. (தமிழ், ஆங்கிலம்)

98. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2011. (தமிழ், ஆங்கிலம்)

99. மானியக் கோரிக்கை எண் 52 - மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2011-2012. (தமிழ், ஆங்கிலம்)

100. மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2011-2012. (தமிழ், ஆங்கிலம்)

101. மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2011-2012. (தமிழ், ஆங்கிலம்)

TRUTH ALONE TRIUMPHS